மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அவை முன்னவர் அவர்கள் வைத்த வேண்டுகோளை ஏற்று அந்த ஒரு வார்த்தையை மட்டும் எடுத்துவிட்டு, மற்றவற்றை எல்லாம் வைத்துக்கொள்ளலாம். என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். எதிர்காலத்திலே சரியாக, முறையாகக் கையாளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், என்ன ? (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தாலுகாவை, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், இல்லை, நீங்கள் உட்காருங்கள். நேற்று இதைப்பற்றி இந்த மன்றத்திலே நீங்கள் விரிவாகப் பேசியபோது, அதற்குரிய பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உங்களுக்குத் தெரிவித்துவிட்டார். மேற்கொண்டும் நீங்கள் அதைப் பேச வேண்டாம். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் சொல்வதைக் கேளுங்கள். ஏற்கெனவே,* BAC–*யிலேயே (குறுக்கீடு) இல்லை,* BAC–*யிலேயே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார். உங்களுக்குரிய பதிலை அவர் அளித்துவிட்டார். நேற்றைக்கும் நீங்கள் அதைப்பற்றி விரிவாக இந்த மன்றத்திலே பேசினீர்கள். பேசியதற்கு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தெளிவான பதிலை உங்களுக்குத் தெரிவித்துவிட்டார். மேற்கொண்டு அதையெல்லாம் பேச முடியாது. வேண்டாம், விடுங்கள். பேசிய* matter–*ஐயே திரும்பத் திரும்பப் பேசுவது என்பது முறையல்ல. (குறுக்கீடு)*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு உறுப்பினருக்கு ஒரு பணிவான வேண்டுகோள். அதை* Business Advisory Committee–*யிலே சொல்லக் கூடாது. இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நிச்சயமாக*

நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார். நடவடிக்கை எடுத்திருக்கிறேன் என்று சொல்கிறார். அத்தோடு விட்டு விடுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாக்கு கொடுத்ததற்குப் பிறகு, அவரைவிட பெரிய அமைச்சர் யாரும் கிடையாது. (குறுக்கீடு) கொடுப்பார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, ஏற்கெனவே அதையெல்லாம் பேசி, ஒரு பதில் உங்களுக்கு கிடைத்தாகி விட்டது. அவ்வளவுதான். அதில் மேற்கொண்டு எதுவும் இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு, என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

முற்பகல் 11–30

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்கள் மற்றும் இஸ்லாமிய சிறைக் கைதிகளின் விடுதலையில் தாமதம் குறித்து சட்டமன்றப் பேரவையில் விவாதிக்க தங்களிடத்தில் அனுமதி கேட்டிருந்தோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதியில்லை. இங்கே பாருங்கள். அதெல்லாம், மேதகு ஆளுநர் அவர்களுடைய ஆளுகைக்குட்பட்ட விஷயம். அதையெல்லாம், இந்த மன்றத்திலே நாம் விவாதிக்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. அதெல்லாம் ஒன்றுமில்லை. அதெல்லாம் அரசு பரிந்துரை செய்துவிட்டது. மேதகு ஆளுநர் அவர்களுடைய ஆய்வில் இருக்கின்ற பொருள் குறித்து இங்கே நாம் பேச முடியாது. உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் மேதகு ஆளுநர் அவர்களுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) அரசிடமிருந்து பரிந்துரையெல்லாம் போய்விட்டது. அதோடு விட்டுவிடுங்கள். அதற்கு மேற்கொண்டு என்ன என்பதையெல்லாம் இங்கே, இந்த அவையில் நீங்கள் விவாதிக்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை, அதெல்லாம் ஒன்றுமில்லை. உட்காருங்கள்.

(உறுப்பினர்கள் திரு. எம். தமிமுன் அன்சாரி, திரு. உ. தனியரசு மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)